Media Release

உடனடி வெளியீட்டுக்காக

## சமுதாய சக்தி வெளிப்பாடு மற்றும் புகை உமிழ்தல் குறைப்புத் திட்டத்திற்கு ப்ராம்ப்ட்டன் நகர சபை ஏகமனதாக ஆமோதிப்பு வழங்கியது

ப்ராம்ப்ட்டன், ON (செப்டம்பர் 23, 2020) – இன்றைய நகரசபை கூட்டத்தில், ப்ராம்ப்ட்டன் நகர சபை உறுப்பினர்கள், 2050 ஆம் ஆண்டுவாக்கில் ப்ராம்ப்ட்டனில் உள்ள பசுமை இல்ல வாயு (ஜிஹெச்ஜி(GHG)) உமிழ்வை 80 சதவீதமாகக் குறைப்பதற்கான நகரத்தின் இலக்கை நிறைவேற்றுவதற்கான ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையை மேற்கொண்டனர்; இது நகரத்தின் முதலாவதான, சமுதாய சக்தி வெளிப்பாடு மற்றும் புகை உமிழ்தலைக் குறைக்கும் திட்டத்திற்கு (CEERP) ஆமோதிப்பு வழங்கியதன்மூலம் செய்யப்பட்டது.

ஷெரிடன் கல்லூரியுடன் இணைந்து உருவாக்கப்பட்ட இந்த CEERP ஆனது, நகரத்திற்கு, குடியிருப்பாளர்களுக்கு மற்றும் வணிகங்களுக்கு உதவ ஒரு வழிகாட்டியாக செயல்படும்; இதன்மூலம் ஆற்றல் செயல்திறனை மேம்படுத்துவதற்கும், GHG களைக் குறைப்பதற்கும், சக்தி பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், பொருளாதார பலன்களை உருவாக்குவதற்கும், காலநிலை மாற்றம் ஏற்படுவதில் பின்னடைவை அதிகரிப்பதற்கும் புதிய சிறந்த பழக்கமுறைகளை உருவாக்கி பின்பற்றப்படும். CEERP க்கு என குறிப்பாக மூன்று குறிக்கோள்கள் உள்ளன:

- எரிசக்திக்கான சமூக அளவிலான இறுதிநிலை பயன்பாட்டை 2016 ஆம் ஆண்டின் அளவிலிருந்து 2041 க்குள் குறைந்தது 50 சதவீதம் குறைத்தல்
- சமூக அளவிலான புகை உமிழ்வுகளை 2016 ஆம் ஆண்டின் அளவிலிருந்து 2041 க்குள் குறைந்தது 50 சதவீதம் குறைத்தல் மற்றும் 2050 ஆம் ஆண்டு வாக்கில், இதற்கான கூட்டாட்சி மற்றும் மாகாண இலக்குகளை பூர்த்தி செய்யவோ அல்லது அதையும் தாண்டும் வகையிலோ குறைந்தபட்சம் 80 சதவிகிதம் உமிழ்வைக் குறைப்பதற்கான வழிமுறையை உண்டாக்குதல் .
- சமூகத்திற்குள் ஒட்டுமொத்த ஆற்றல் செலவினங்களை 2041 ஆம் ஆண்டிற்குள் குறைந்தது 26 பில்லியன் அளவுக்கு தக்க வைத்துக்கொள்ளுதல்.

நகர நிர்வாகமானது, இந்த மூன்று இலக்குகளையும் ஏழு மூலோபாய வழிமுறைகள் மூலம் நிறைவேற்றும். ஒவ்வொரு மூலோபாய வழிமுறையிலும் வரிசைக்கிரமமான குறிக்கோள்கள் மற்றும் 2041 ஆம் ஆண்டிற்கான இலக்குகள் உள்ளன; அவை நகர நிர்வாகத்தின் மற்றும் சமூகத்தின் நடவடிக்கைகளை வழிநடத்தும். ப்ராம்ப்ட்டன் நகரின் ஆற்றலுக்கான மாற்றத்தை துரிதப்படுத்த, அடுத்த ஐந்து ஆண்டுகளில் முடிக்கப்பட வேண்டிய ஆறு முன்னுரிமை கொண்ட திட்டங்களை CEERP அடையாளம் காட்டுகிறது.

முன்னுரிமை கொண்ட திட்டப்பணிகளுக்கு அப்பால், அடுத்த 20 ஆண்டுகளில் திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை பூர்த்தி செய்வதற்கான பல நடவடிக்கைகளை CEERP கோடிட்டுக் காட்டுகிறது. இந்த நடவடிக்கைகள், நடந்துகொண்டிருப்பவை, குறுகிகாலத்திற்கானவை, ஓரளவுக்கான காலம் நீடிப்பவை அல்லது நீண்ட காலம் செய்யப்படவேண்டியவை என மூன்று பிரிவுகளாக அடையாளம் காணப்படுகின்றன, மற்றும் அவை அவ்வப்போது புதுப்பிக்கப்படும்.

CEERP பற்றிய மேலும் தகவல்களுக்கு வருகை புரியவும்: www.brampton.ca/ceerp

**விரைவான கூற்றுக்கள்**

- 2019 ஆம் ஆண்டில், ப்ராம்ப்ட்டன் நகர சபையானது, 2050 ஆம் ஆண்டு வாக்கில் நகரத்தில் உருவாக்கப்படும் ஜிஹெச்ஜி(GHG) க்களை 80 சதவீதமாகக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டு காலநிலைமாற்றம் மீதான ஒரு அவசரநிலையை அறிவிக்க ஒருமனதாக வாக்களித்தது.
- இந்த திட்டத்தை உருவாக்க CEERP சமூக பணிப்படை, தொழில் மற்றும் சமூகத் தலைவர்கள் கொண்ட குழு ஆகியவை ஒத்துழைத்தன.
- பிப்ரவரி மாதத்தில், ஒரு மில்லியன் மரங்கள் வளர்க்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக, ஒவ்வொரு ஆண்டும் நகரம் முழுவதும் 50,000 புதிய மரங்களை நடவு செய்ய ப்ராம்ப்ட்டன் நகர சபை ஒப்புதல் அளித்தது. இது, காலநிலை மாற்ற அச்சுறுத்தலைக் கையாள்வதற்கான மற்றொரு பெரிய படியாகும்.
- காலநிலை மற்றும் எரிசக்திக்கான மேயர்களின் உலகளாவிய உடன்படிக்கைக்கான அமைப்பில் மேயர் பேட்ரிக் பிரவுன் உறுப்பினராக உள்ளார், இந்த அமைப்பானது, காலநிலை மாற்றத்திற்கு எதிரான போராட்டத்தை வழிநடத்துகின்ற 9,200 க்கும் மேற்பட்ட நகரங்களின் உலகளாவிய கூட்டணியாகும்.
- பீல் பிராந்திய காலநிலை மாற்ற கூட்டாண்மை அமைப்பின் உறுப்பினராக ப்ராம்ப்ட்டன் நகரம் உள்ளது, இந்த அமைப்பானது பீல் பிராந்தியத்திற்கும் உள்ளூர் நகராட்சிகளுக்கும் இடையிலான ஒத்துழைப்புக்கு என ஏற்பட்டதாகும்; இவர்கள் திட்டங்களில் ஒன்றிணைந்து செயல்படுகின்றனர் மற்றும் ஒவ்வொரு உறுப்பினர் அமைப்பும் பசுமை இல்ல (கிரீன் ஹவுஸ்) வாயு உமிழ்வைக் குறைக்கவும், காலநிலை மாற்றத்திற்கு பொருத்திக்கொள்ளவும் உதவும்.

**அறிஞர் கூற்றுக்கள்**

“சமுதாய சக்தி வெளிப்பாடு மற்றும் புகை உமிழ்தலைக் குறைக்கும் திட்டமானது, நமது நகரம் ஒரு நிலையான, பசுமை நகரமாக மாறுவதற்கான நமது பயணத்தின் மற்றொரு குறிப்பிடத்தக்க படியாகும். 2050 ஆம் ஆண்டு வாக்கில் ப்ராம்ப்ட்டன் நகரில் உள்ள பசுமை இல்ல வாயு உமிழ்வை 80 சதவிகிதம் குறைப்பதற்கான நமது இலக்கை அடைய இது உதவும் என்பது மட்டுமல்லாமல், காலநிலை அவசர நிலைக்கு எதிரான நமது போராட்டத்தில் ப்ராம்ப்ட்டன் நகராட்சி முன்னணியாக இருக்கிறது

என்பதையும் இது காட்டுகிறது. காலநிலை மாற்றமடைந்துவிடக்கூடிய அச்சுறுத்தலை சமாளிக்க நாம் அனைவரும் தொடர்ந்து பணியாற்ற வேண்டும். ”

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“கனடாவில் உள்ள பசுமை இல்ல வாயு உமிழ்வுகளில் கிட்டத்தட்ட பாதி அளவுக்கு நகராட்சிகளே பொறுப்பாகின்றன. சமுதாய சக்தி வெளிப்பாடு மற்றும் புகை உமிழ்தலைக் குறைக்கும் திட்டம் என்பது, ஒரு பசுமை நகரமாக ப்ராம்ப்ட்டன் இருக்கவேண்டும் என்பதற்கான உறுதிப்பாட்டின் தெளிவான எடுத்துக்காட்டு ஆகும்; மேலும் சக்திக்கான செயல்திறனை மேம்படுத்துதல், ஜிஹெச்ஜி (GHG) க்களைக் குறைத்தல் மற்றும் காலநிலை மாற்றத்திற்கு அதிக பின்னடைவை நாம் ஏற்படுத்துதல் ஆகியவற்றுக்காக நாங்கள் கொண்ட அர்ப்பணிப்பில் இது எங்களுக்கு உதவும் என்று நான் நம்புகிறேன். ”

*- பால் விசெண்ட், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5, தலைமைப் பொறுப்பு, பொதுப்பணிகள் மற்றும் பொறியியல் துறை, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“நாம் விட்டுச்செல்லும் சுவடுகளைக் குறைக்க, இந்த பிரகடனம் செய்யப்பட்ட காலநிலை அவசரநிலையின் போது நாம் தொடர்ந்து இணைந்து செயல்பட வேண்டும். CEERP சமூக பணிப்படையின் ஒரு பகுதியாக ஒத்துழைத்த அனைவருக்கும், மற்றும் சமுதாய சக்தி வெளிப்பாடு மற்றும் புகை உமிழ்தலைக் குறைக்கும் திட்டம் பற்றி மேலும் அறிந்து ஈடுபாடு கொள்ளச்செய்வதற்கான அமர்வு கூட்டங்களில் கலந்து கொண்ட குடியிருப்புவாசிகளுக்கும் எங்கள் நன்றி. நாம் ஒரு பசுமை நகரத்தை கட்டியெழுப்பும்போது, அதன் நிலைத்து இருக்க வேண்டிய தன்மைக்கான நமது பயணத்தில் இது ஒரு முக்கியமான வழி காட்டும் வரைபடமாக செயல்படும். ”

*- டக் வில்லன்ஸ், நகர கவுன்சிலர், வார்டுகள் 2 & 6, உறுப்பினர், CEERP சமுதாய பணிப்படை, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“பசுமை நகரமாக இருப்பதற்கான ப்ராம்ப்ட்டன் நகரின் முன்னுரிமை கொண்ட விஷயத்தை நோக்கி நாம் தொடர்ந்து பணியாற்றி வருகிறோம்; 2050 ஆம் ஆண்டுவாக்கில் நமது சமூகத்தில் பசுமை இல்ல வாயு உமிழ்வை 80 சதவீதமாகக் குறைக்கும் கவுன்சிலின் இலக்கை அடைவதற்கான முயற்சியில், ஷெரிடனுடன் இணைந்து உருவாக்கப்பட்ட சமுதாய சக்தி வெளிப்பாடு மற்றும் புகை உமிழ்தலைக் குறைக்கும் திட்டமானது, ஊழியர்களுக்கு வழிகாட்டும்.

*- டேவிட் பேர்ரிக், தலமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே

செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும்,  சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான  ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம்.  Twitter, Facebook, *மற்றும்* Instagram *ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள்.*  www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய  ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca